# பாரதீய ஜனதா கட்சி

# (மத்திய அலுவலகம்)

11, அசோக் சாலை, புதுடெல்லி 110001
தொ.பே. எண்: 23005700; தொலைநகல்: 23005787

தேதி : ஜனவரி 19, 2013

<u>பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமைச் செய்தித் தொடர்பாளர் மற்றும் மாநிலங்களவை எதிர்கட்சி துணைத்தலைவர் திரு.ரவி ஷங்கர் பிரசாத் விடுத்த செய்தி அறிக்கை</u>

ஜெய்ப்பூரில் நடந்த இரண்டு நாள் மாநாட்டில் காங்கிரஸ் கட்சி நேர்மையாக சுயபரிசீலனை செய்வதற்குப் பதிலாக தனது எதிர்காலம் பற்றியே அதிகம் கவலைப்பட்டுள்ளது தெளிவாகியுள்ளது. இந்தியாவின் மக்கள்தொகையில் 25 வயதுக்கு கீழே உள்ள 50 சதவீதம் இளைஞர்கள், 35 வயதுக்குக் கீழே உள்ளவர்கள் பற்றியும், நடுத்தர வர்க்கத்தினர் பற்றியும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் 9 ஆண்டுக் கால ஆட்சிக்குப் பிறகு திடீர் கவலை ஏன் திருமதி.சோனியா காந்திக்கு ஏற்பட்டுள்ளது. விலைவாசி ஏற்றத்தாலும், விலைவீக்கத்தாலும் ஏற்பட்ட பின்விளைவுகளால் ஏழை இந்தியர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் படித்த இளைஞர்களின் வாழ்க்கைப் பாதுகாப்புக்கு இதுவரை என்னவிதமான வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்ற கேள்விக்கு திருமதி. சோனியா காந்தி பதில் அளிக்க வேண்டிய அவசியம் உள்ளது. 100 நாட்களில் விலைவீக்கத்தையும் விலை ஏற்றத்தையும் கட்டுப்படுத்துவேன் என்று திரும்பத் திரும்ப வாக்குறுதி கொடுத்தும் ஏன் நான்கரை ஆண்டுகளுக்குப் பிறகும் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் அவர் பதில் அளிக்க வேண்டும். இன்று ஜிடிபி 5.3 சதவீதத்துக்கு சரிந்துள்ளது. தொழில் உற்பத்தி இறங்குமுகத்தில் உள்ளது. ஏற்றுமதி, இறக்குமதிக்கும் அதே நிலைதான். அந்நிய, உள்நாட்டு முதலீடு வேகமாக சரிந்துவருகிறது.

இந்தியா வளர்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. இச்சூழ்நிலையில் அடுத்த தேர்தலுக்கு ஒரு ஆண்டே இருக்கும் நிலையில் எப்படி நடுத்தர வர்க்க இளைஞர்களின் அபிலாஷைகளை அவர் எப்படி நிறைவேற்ற முடியும். ?

ஊழல், தற்காலிக முடிவுகள், கொள்கை ரீதியான செயலற்ற தன்மை ஆகிய அடிப்படை பிரச்சினைகளையும் வெட்கமின்றி ஊழல்வாதிகளைப் பாதுகாப்பதையும் திருமதி. சோனியா காந்தி சௌகரியமாக மறந்தேவிட்டார். இதுதான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் பிரதான செயல்பாடாக உள்ளது. நல்ல நிர்வாகம் என்பதை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மறந்தே விட்டது. பலமுனைகளில் நடந்த ஊழல் நாட்டிலுள்ள இளைஞர்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி விட்டது.

இப்படியான இருண்ட சூழ்நிலையிலும் பாஜகவும், தேசிய ஜனநாயக கூட்டணியும் ஆளும் மாநிலங்களான குஜராத், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், பீகார் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பாராட்டத்தகுந்த அளவு வளர்ச்சி 10 சதவீதத்திற்கும் மேல் உள்ளது. ஆனால் பொருளாதார வல்லுநரான பிரதமரின் ஆட்சியிலோ நாடு 5.3 சதவீத நிலையில் தள்ளாடிக்கொண்டிருக்கிறது.

ராகுல் காந்திக்கு பெரிய பொறுப்பை வழங்குவதன் மூலம் இந்திய இளைஞனின் அபிலாசைகளை நிறைவேற்றி விட முடியாது. இந்தியா மற்றும் இந்தியர்களைப் பொறுத்தவரை அதனால் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. இந்திய மக்கள் மாற்றம் வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். தேர்தல் எப்போது வந்தாலும், நல்ல நிர்வாகத்துக்குப் பெயர்பெற்ற பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியைத்தான் அவர்கள் நிச்சயமாக மத்தியில் ஆள்வதற்கு தேர்ந்தெடுக்கப் போகின்றனர்

**(ஓ.பி.கோஹ்லி)**
*தலைமை நிலையப் பொறுப்பாளர்*